

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | மார்ச் 21, 2019 | புரட்சி 18 | முழக்கம் 10 | விலை: ரூ.3.00


# பொள்ளாச்சி கூட்டு பாலியல் வன்முறையைக் கண்டித்துக் கழகம் ஆர்ப்பாட்டங்கள்

*சென்னை, பொள்ளாச்சி, திருப்பூர், நாமக்கல்லில் கழக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.*

**நாமக்கல்:** தமிழகத்தையே பேரதிர்ச்சிக்குள்ளாக்கிய பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமையை கண்டித்தும், அனைத்து குற்றவாளிகளையும் அரசியல்




தலையீடு இல்லாமல் கைது செய்யவும், இனிமேல் இதுபோல் குற்றங்கள் நடக்காமலிருக்க நிரந்தர தீர்வான "பாலியல் கல்வியை" பள்ளிப் பாடங்களில் நடைமுறைபடுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளைய நகர திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் அனைத்து தோழமை அமைப்புகளையும் ஒருங்கிணைத்து ஞாயிறு(17.03.2019) மாலை 5 மணிக்கு பள்ளிபாளையம் பேருந்து நிலையத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்பாட்டத்திற்கு பள்ளிபாளையம் நகரத் தலைவர் மீனா தலைமை வகிக்க, திருச்செங்கோடு நகர அமைப்பாளர் தனலட்சுமி முன்னிலை வகித்தார். நாமக்கல் மாவட்ட தலைவர் சாமிநாதன் வரவேற்புறையாற்றினார். பாலியல் குற்றவாளிகளை கண்டித்து, நகரச்செயலாளர் மாரியப்பன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட துணைச்செயலாளர் அஜ்மீர், திராவிடர் கழகம் மாவட்ட துணைச்செயலாளர் பொன்னுசாமி, DYFI ஒன்றியக்குழு செயலாளர் பிரபாகரன், புரட்சிகர இளைஞர் முன்னணி அமுதன், திராவிடர் விடுதலைக் கழக நாமக்கல் மாவட்ட அமைப்பாளர் முத்துப்பாண்டி மற்றும் வழக்குரைஞர் அ.பிரகாஷ் ஆகியோர் கண்டன உரையை பதிவு செய்தனர். ஆர்பாட்டத்தில், தோழமை அமைப்புகளைச் சேர்ந்த 40 க்கும் மேற்ப்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். இறுதியாக பள்ளிபாளையம் திராவிடர் விடுதலைக் கழக நகர துணைச் செயலாளர் சங்கர் நன்றியுரை யாற்றினார்.

**சென்னை :** பொள்ளாச்சி கயவர்களை தப்ப விடாதே என்ற கண்டன முழக்கத் தோடு சமத்துவத்துக்கான சுயமரியாதை பெண்களின் கண்டன ஆர்ப்பாட்டம் கழக சார்பில் 15.03.2019 அன்று மாலை 4 மணிக்கு சென்னை வள்ளுவர்கோட்டத்தில் நடந்தது. இரண்யா தலைமை தாங்கினார். தோழர்கள் ராஜீ, சங்கீதா, பூர்ணிமா முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பெண்களுக்கு எதிராக தொடர்ச்சியாக நடைபெறும் பாலியல் வன்கொடுமைகளைக் கண்டித்து பியூசிஎல் அமைப்பை சார்ந்த பேராசிரியர் சரசுவதி, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அஜிதா, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சார்ந்த பேராசிரியர் சுந்தரவள்ளி, மனிதி அமைப்பைச் சார்ந்த மார்ட்டினா, தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தைச் சார்ந்த சுமதி காந்தி, இளந்தமிழகம் செந்தில், மே 17 இயக்கம் பிரவீன் ஆகியோர் பொள்ளாச்சி சம்பவத்தில் குற்றவாளிகளை தப்பிக்க வழிவகை செய்யும் மாநில அரசைக் கண்டித்து உரையாற்றினர்.

தொடர்ந்து, பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபடுவோர் மீது சட்டத்தை கடுமையாக்கவும், பெண்களின் பாதுகாப்புக்கு தகுந்த நடவடிக்கை எடுக்கக் கோரியும் முழக்கங்களை எழுப்பினர். இறுதியாக அம்பிகா நன்றியுரையுடன் கூட்டம் நிறைவடைந்தது.

**பொள்ளாச்சி :** பொள்ளாச்சி பெண்கள் மாணவிகள் மீதான பாலியல் வன்முறைகளைத் தடுத்து நிறுத்த வலியுறுத்தியும், எஞ்சிய உண்மை குற்றவாளிகளை கண்டுபிடித்து எந்தவித பாரபட்சமும் இன்றி பெண்கள்




வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் உடனடியாக கைது செய்ய வலியுறுத்தியும், பாதிக்கப்பட்ட பெண்களின் குடும்பத்துக்கு உரிய பாதுகாப்பு வழங்கக் கோரியும் கண்டன ஆர்ப்பாட்டம் வினோதினி தலைமையில் பொள்ளாச்சி திருவள்ளுவர் திடலில் மார்ச் 10 அன்று மாலை 5 மணிக்கு பொள்ளாச்சி திருவள்ளுவர் திடலில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் பேராசிரியர் சரசுவதி (பியூசிஎல் அகில இந்தியத் துணைத் தலைவர்), ஆசிரியர் சிவகாமி (தமிழ்நாடு அறிவியல் மன்றம்) சிறப்புரையாற்றினர்.

திமுக நகர துணைச் செயலாளர் நா.கார்த்திகேயன், வெள்ளிங்கிரி யாழ் (திவிக மாவட்டச் செயலாளர்), மடத்துக்குளம் மோகன் (திவிக தலைமைக் குழு உறுப்பினர்), திருப்பூர் துரைசாமி (திவிக பொருளாளர்), காசு நாகராசன் (ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு திக), தேன்மொழி (தமிழ்நாடு மாணவர் கழகம்) ஆகியோர் உரையாற்றினர். சபரி கிரி நன்றியுரையாற்றினார்.

**திருச்சி :** 16.3.2019 அன்று திருச்சி சிந்தாமணி அண்ணா சிலை அருகில் காலை 10.30 மணிக்கு அகில இந்திய மஸ்லிஸ் கட்சி சார்பில் பொள்ளாச்சி பாலியல்



குற்றவாளிகளை கண்டுபிடிக்கவும், சி.பி.ஐ., சி.பி.சி.ஐ.டி. பெயரைச் சொல்லி உண்மை குற்றவாளிகளை தப்பிக்க உதவி செய்வதைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மாவட்ட அமைப்பாளர் புதியவன் கண்டன உரையாற்றினார். கழக சார்பில் மாவட்டச் செயலாளர் மு.மனோகரன், திருவரங்க நகர அமைப்பாளர் த.அசோக், திருவெறும்பூர் ஒன்றிய தலைவர் பி. மணிகண்டன் மற்றும் பல அமைப்புகளின் தோழர்களும் கலந்து கொண்டனர்.

**திருப்பூர் :** 18.03.2019 திங்கள்கிழமை மாலை 4.00 மணிக்கு திருப்பூர் மாநகராட்சி




அலுவலகம் அருகில் சுசீலா தலைமையில் பார்வதி, சங்கீதா, முத்துலட்சுமி, கோமதி ஆகியோர் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

திருப்பூர் துரைசாமி, (கழகப் பொருளாளர்), ஈரோடு இரத்தினசாமி (கழக அமைப்புச் செயலாளர்), முகில்ராசு (கழக மாவட்டத் தலைவர்), மடத்துக்குளம் மோகன் (கழக தலைமைக் குழு உறுப்பினர்), ஆறுமுகம் (கழக மாவட்டத் தலைவர்), சண். முத்துக்குமார் (மாநகரத் தலைவர்த.பெ.தி.க.), துரைவளவன் (மாநில துணைச்செயலாளர்,வி.சி.க.), அருண் (திருவள்ளுவர் பேரவை), முருகானந்தம் (திராவிடர் இயக்க தமிழர் பேரவை), அஸ்லம் (த.ம.ஜ.க.), தமிழ்நாடு மாணவர் கழக தோழர்கள் தேன்மொழி, கனல்மதி, மதுலதா, பிரசாந்த், சபரி, சரஸ்வதி ராமசாமி ஆகியோர் கண்டன உரையையாற்றினர்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் திருப்பூர், ஈரோடு, கோவை மற்றும் பொள்ளாச்சி கழகத் தோழர்கள் 100க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்

# அய்.அய்.டி.களைப் பார்ப்பன மயமாக்கிய பா.ஜ.க.

- சென்னை அய்.அய்.டி.யில் அம்பேத்கர் பெரியார் படிப்பு வட்டத்தை உருவாக்கிய மாணவர்களை மிரட்டி, அதற்குத் தடைபோட்டது யார்? - **பா.ஜ.க. ஆட்சி.** அதே நேரத்தில் விவேகானந்தர், வால்மீகி, உபநிஷத்துகள் பெயரில் படிப்பு வட்டங்களை நடத்துவதற்கு அனுமதி அளித்தது - **பா.ஜ.க. ஆட்சி.**
- அய்.அய்.டி.யில் சைவ, அசைவ உணவு சாப்பிடும் மாணவர்கள் ஒன்றாக அமர்ந்து உணவருந்திய தோழமையைக் குலைத்து இரு பிரிவினருக்கும் தனித் தனி உணவருந்தும் இடங்கள்; தனித் தனி தட்டுகள்; தனித் தனிக் குவளைகள் என்ற வர்ணப் பாகுபாட்டைப் புகுத்தியது யார்? - **பா.ஜ.க. ஆட்சி.**
- அய்.அய்.டி. வளாகத்தில் தனக்குப் பிடித்தமான மாட்டுக்கறியை சாப்பிட்ட மாணவர்கள் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்திய பார்ப்பன உயர்ஜாதி மாணவர்களுக்கு பாதுகாப்பு அளித்து காப்பாற்றியது யார்? - **பா.ஜ..க. மனிதவளத்துறை அமைச்சகம்.**
- சென்னை அய்.அய்.டி. வளாகத்தில் மத்திய அமைச்சர்கள் நித்தின் கட்காரி, பொன். இராதாகிருஷ்ணன் பங்கேற்ற விழாவில் 'மகா கணபதி' என்ற இறை வாழ்த்துப் பாடலைப் பாடி தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலை பாட மறுத்ததற்கு காரணம் யார்? - **பா.ஜ.க. ஆட்சி.**
- சமஸ்கிருதத்தை அய்.அய்.டி.யில் ஒரு விருப்பப் பாடமாக்கியதோடு தொழில்நுட்பப் பாடங்களைப் புரிந்து கொள்வதற்கு சமஸ்கிருத அறிவு கட்டாயம் வேண்டும் என்று அறிவித்தது யார்? - **பா.ஜ.க. ஆட்சி.**
- இந்தியாவின் உயர்கல்வி நிறுவனத்தை பார்ப்பனிய மாக்கியது பா.ஜ.க.வின் மனிதவளத் துறை. அம்பேத்கரையும் பெரியாரையும் வளாகத்துக்குள் தீண்டப்படாதவர் களாக மாற்றியது **பா.ஜ.க.வின் மனித வளத்துறை அமைச்சகம்.**

## இந்த ஆசாமியை நினைவிருக்கிறதா?



- மோடியை விமர்சித்துப் பேசியதற்காக வைகோ வீதிகளில் நடமாடி முடியாது என்று பார்ப்பனத் திமிரோடு பேசியது யார்?
- திரிபுராவில் லெனின் சிலை உடைக்கப்பட்ட போது தமிழ்நாட்டிலும் பெரியார் சிலைகளை உடைக்க வேண்டும் என்று முகநூலில் பதிவிட்டு சொந்தக் கட்சிக்குள்ளே எதிர்ப்பு வந்த பிறகு அதை 'அட்மின்' போட்டார் என்று பதுங்கியது யார்?
- 'ஈ.வெ.ரா. ஒரு தேசத் துரோகி' என்று வாய்க் கொழுப்போடு தொடர்ந்து பேசியது யார்?
- பெரியார் சிலைகளையும் உடைக்க வேண்டும் என்று முகநூலில் பதிவு செய்ததைத் தொடர்ந்து திருப்பத்தூரிலும் தாராபுரத்திலும் பெரியார் சிலைகளை மதவெறி காலிகள் சேதப்படுத்தியதற்கு தூண்டி விட்டது யார்?
- திருவெம்பாவையை பாடியதாகக் கூறப்படும் 'ஆண்டாள்' - தேவதாசி மரபிலிருந்து வந்திருக்கக் கூடும் என்ற ஒரு ஆய்வுக் கருத்தை பேசியதற்காக கவிஞர் வைரமுத்துவையும் அவரது 'பிறப்பையும்' ஒருமையில் பார்ப்பனத் திமிரோடு இழிவுபடுத்தியது யார்? (ஆண்டாளுக்காக வீதியில் வந்து போராடிய பார்ப்பனப் பெண்களும் ஆண்களும் இப்போது பொள்ளாச்சி பாலுறவு வன்முறைக்கு வாயை மூடிக் கொண்டிருக்கிறார்கள்)
- உயர்நீதிமன்றம் மேடை போட அனுமதிக்கவில்லை என்று காவல்துறை கூறியபோது என்ன 'மயிரு கோர்ட்' என்று உயர்நீதிமன்றத்தையே தடித்த வார்த்தைகளில் பேசி, பிறகு உயர்நீதிமன்றத்தில் மன்னிப்புக் கேட்ட 'மாவீரன்' யார்?
- தனது தந்தை எழுதிய சமஸ்கிருத நூல் வெளியீட்டு விழாவுக்கு காஞ்சி விஜயேந்திரனை அழைத்து தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடியபோது காஞ்சி விஜயேந்திரன் எழுந்து நிற்க மறுத்ததை நியாயப்படுத்தியது யார்?
- மாநிலங்களவை தி.மு.க. அணித் தலைவர் கனிமொழியை பிறப்பின் அடிப்படையில் இழிவுபடுத்திப் பேசியது யார்?

அந்த ஆசாமிதான் எச். ராஜா .

# கல்வி வளாகத்தைப் பயன்படுத்தியது யார்?

ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் காங்கிரஸ் தலைவர் இராகுல் காந்தி பேசியதும் அதற்கு மாணவிகளிடையே கிடைத்த ஆதரவும், பா.ஜ.க., அ.இ.அ.தி.மு.க.வினர் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது. உடனே அக்கல்லூரி நிர்வாகத்துக்கு தமிழகக் கல்லூரிக் கல்வி இயக்ககம் விளக்கம் கேட்டு மிரட்டியிருக்கிறது. தேர்தல் நடத்தை விதிகள் வருவதற்கு முன்பே ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி என்று காங்கிரஸ் தரப்பில் விளக்கம் தரப்படுகிறது. முன்னாள் தேர்தல் ஆணையரான கோபால்சாமி அய்யங்கார் என்ற பார்ப்பனர், இராகுல் காந்தி - கல்லூரி வளாகத்தில் அரசியல் பேசியது தவறுதான் என்கிறார். அதில் தேர்தல் நடத்தை விதிமுறை மீறல் ஏதுமில்லை என்று இப்போது தேர்தல் ஆணையம் கூறிவிட்டது. சரி இருக்கட்டும்; தமிழக அரசுக்கு இதைக் கேட்கும் உரிமை இருக்கிறதா?

கல்லூரி வளாகத்தை ஆர்.எஸ்.எஸ். நடத்தும் மத நிகழ்ச்சிகளுக்கு அ.இ.அ.தி.மு.க. ஆட்சி கடந்த காலங்களில் எந்த நிபந்தனையும் இல்லாமல் திறந்து விட்டதை நினைவூட்ட விரும்புகிறோம். கல்வி வளாகத்தை மத நிகழ்வுகளுக்குப் பயன்படுத்தக் கூடாது என்பது கல்விக் கூடங்களுக்கான ஒழுங்குமுறை விதி.

கடந்த 2018ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் விவேகானந்தரின் சீடரான நிவேதிதாவின் 150ஆவது பிறந்த நாள் விழாவுக்காக இராமகிருஷ்ணா மடத்துடன் ஆர்.எஸ்.எஸ். இணைந்து இரதயாத்திரை ஒன்றை நடத்தியது. இந்த இரதயாத்திரையை ஒவ்வொரு கல்லூரி வளாகத்துக் குள்ளும் கொண்டுபோய் மாணவ மாணவிகளின் வரவேற்புக்கு ஏற்பாடு செய்தவர் பா.ஜ.க.வின் செயலாளர்களில் ஒருவரான வானதி சீனிவாசன்.

2018 பிப்ரவரி 10ஆம் தேதி சேலம் சாரதா கல்லூரியில் இந்த மத இரதயாத்திரைக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கே யாத்திரையின் ஒருங்கிணைப்பாளர் வானதி சீனிவாசன் யாத்திரையை வரவேற்று மதப் பிரச்சாரம் செய்தார்.

அதைத் தொடர்ந்து இரதயாத்திரை எங்கே வந்தது தெரியுமா? சேலம் பெரியார் பல்கலைக்கழகத்துக்கு வந்தது. இந்த யாத்திரை வரவேற்பில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று பல்கலைக் கழக நிர்வாகமே மாணவர்களுக்கு அதிகாரபூர்வமாக அழைப்பு விடுத்தது.

கல்வி வளாகத்தை இந்து மதப் பரப்புரைக்குப் பயன்படுத்துவதை எதிர்த்து சேலம் கிழக்கு, மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் தோழர்கள் போராட்டம் நடத்திக் கைதானார்கள்.

கல்வி வளாகத்தில் மதப் பரப்புரைக்கு ஏன் அனுமதி தந்தீர்கள் என்று அப்போது தமிழக கல்லூரி இயக்ககம் நோட்டீஸ் அனுப்ப வில்லை. மாறாக, இதற்கு ஆதரவாகவே செயல்பட்டது. பா.ஜ.க.வின் மேலிடக் கட்டளைக்கு அடிபணிந்து நின்றார்கள். இப்போது இராகுல், ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி நிகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் அப்போது வாய் பொத்தி பதுங்கி நின்றது ஏன்? பதில் உண்டா?

தமிழ்நாட்டில் பள்ளி மைதானங்களில் ஆர்.எஸ்.எஸ். பயிற்சிகள் நடந்தபோது அதற்கு தடைவிதித்து அரசாணை போட்டவரே முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். தான் என்ற வரலாறு இவர்களுக்குத் தெரியுமா?

டில்லியில் ஆட்சி அதிகாரம் இருக்கிறது என்ற பார்ப்பனத் திமிருடன் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை சீண்டிக் கொண்டிருந்த அந்த மனிதரை - தமிழர்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள். தேர்தல் ஓட்டுக்காக இப்போது பம்பிக் கொண்டு, பதுங்கி நிற்கும் அந்த பார்ப்பன வெறியரை எப்படித் தமிழர்கள் மன்னிக்க முடியும்?

பார்ப்பனத் திமிருக்கு பதிலடி தருவதற்கான நேரம் இப்போது தேர்தல் வழியாகக் கிடைத்திருக்கிறது.

பதிலடி தருவதற்கு தயாராவீர், தமிழர்களே!

# பெண்களையே குற்றக் கூண்டில் நிறுத்தும் சமூகம்

***பொள்ளாச்சி கூட்டுப் பாலியல் வன்முறையில் பெண்களையே குற்றக் கூண்டில் நிறுத்தும் சமூகப் பார்வையைக் கடுமையாகச் சாடிய நடிகர் சூர்யா, 'தமிழ் இந்து' ஏட்டில் எழுதிய கட்டுரை.***

## நடிகர் சூர்யா

என்னுடைய மகளையும், மகனையும் நான் ஒரேவிதமாக வளர்க்கிறேனா என்ற கேள்வி அடிக்கடி நெருடலாக எனக்குள் வந்து போவதுண்டு. ஆண் குழந்தையின் உடல் மீது எனக்கு எவ்விதமான கற்பிதங்களோ, ஒழுக்க வரையறைகளோ இருப்பதே இல்லை. ஆனால், பெண் குழந்தையின் உடல் குறித்து, என்னையறியாமலேயே நிறைய விதிமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் திணித்துக்கொண்டே இருக்கிறேன். 'நீ எப்படி உடுத்த வேண்டும், நீ எப்படி உட்கார வேண்டும், மற்றவர்கள் பார்வைக்கு உன்னை எப்படி வெளிப்படுத்த வேண்டும்' என்பதுபற்றி, சமூகம் எனக்குக் கற்றுக் கொடுத்த வரைமுறைகளை அறிவுரையாக சொல்லிக்கொண்டே இருக்கிறேன். 'துணிவு மிக்க பெண்ணாக' மகளை வளர்க்க வேண்டும் என்கிற எண்ணத்திற்கும், என் செயலுக்கும் இடைவெளி இருப்பதை என்னாலேயே உணர முடிகிறது.

குழந்தைப்பேறு காலத்தில், மனைவியுடன் மருத்துவமனை செல்லும்போதெல்லாம் ஒரு வாசகம் மனதை நெருடும். 'தாயின் கருவில் இருக்கிற குழந்தை, ஆணா, பெண்ணா என்று ஸ்கேன் செய்து பார்ப்பது சட்டப்படி குற்றம்' என்று தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருக்கும். படித்தவர்களும், பணக்காரர்களும் வந்துபோகிற மருத்துவ மனையில்கூட இப்படி எழுதிப்போட வேண்டிய அவலத்தில் வாழ்கிறோமே என்று வெட்கமாக இருந்தது. பெண் வெறுப்பிலும், எதிர்ப்பிலும் இங்கே படித்தவர்கள், பாமரர்கள்; ஏழைகள், பணக்காரர்கள் என்கிற எந்த வேறுபாடும் இல்லை.

இது ஆண்களுக்கான உலகம்; இங்கே பெண்களுக்கு இடமே இல்லை என்று அர்த்தமல்ல. ஆனால், 'கற்பு, ஒழுக்கம், கலாச்சாரம், குடும்பக் கௌரவம், சாதிப்பெருமை, மதக் கட்டுப்பாடு' என நிறைய 'ஆண் பெருமை'களைக் கட்டிக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு பெண்ணுக்கும் இங்கு இருக்கிறது. அந்தப் பொறுப்பை நிறைவேற்றியபடியே, ஆண்களின் 'கருணை'யில் அவர்களின் வசதிக்கேற்ப, தேவைகளைப் பூர்த்திசெய்து, மனம் கோணாமல் பெண்கள் இவ்வுலகில் இருந்து கொள்ளலாம்.

சிரித்த முகத்துடன், உடையில்லாமல் நிற்கிற ஒரு வயது பெண் குழந்தையிடம், நம்முடைய 'மானப் பிரச்சனை'யை நேரடியாகவும், மறைமுகமாகவும் பிரசாரம்செய்ய தொடங்குவதில் ஆரம்பிக்கிறது நம்முடைய வன்முறை. இதிகாசமாக, வரலாறாக, பண்பாடாக, வீரமாக நாம் கொண்டாடுகிற அனைத்திலும் பெண் உடலுக்கு எதிரான அந்தக் கருத்தியல் வன்முறை நிரம்பி வழிகிறது. கடவுளின் அவதாரமாகவே இருந்தாலும், நெருப்பில் இறங்கித்தானே இங்கே 'கற்பை' நிரூபித்து அவள் மீண்டு வர வேண்டும்! 'என் மனைவியின் ஒழுக்கத்தை யாருக்கும் நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை.அவள் நலமுடன் இருப்பதே எனக்கு மகிழ்ச்சி. கற்பாவது, வெங்காயமாவது' என்று சொல்லும் தைரியம் இங்கே நம்முடைய கடவுளுக்கேகூட இல்லையே!

**கடவுளின் அவதாரமாகவே இருந்தாலும், நெருப்பில் இறங்கித்தானே இங்கே 'கற்பை' நிரூபித்து அவள் மீண்டு வர வேண்டும்! 'என் மனைவியின் ஒழுக்கத்தை யாருக்கும் நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை.அவள் நலமுடன் இருப்பதே எனக்கு மகிழ்ச்சி. கற்பாவது, வெங்காயமாவது' என்று சொல்லும் தைரியம் இங்கே நம்முடைய கடவுளுக்கேகூட இல்லையே!**

சில வருடங்களுக்கு முன்பு, சேலத்தில் ஒரு பெண்ணின் அந்தரங்கப் புகைப்படங்களை இணையத்தில் வெளியிடுகிறான் அவளுடைய முன்னாள் காதலன். அந்தப் பெண் தன் வீட்டில் உண்மையைச் சொல்கிறாள். 'குடும்ப மானத்தைக் கெடுத்துட்டியே' என்று அடித்துத் துன்புறுத்துகிறார்கள். அந்த புகைப்படங்கள் மேலும் இணையத்தில் பரவிவிடக் கூடாது என்று புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றால், 'இப்படி பொண்ணை பெத்து ஊர் மேய விட்டுட்டு, இப்ப வந்து நில்லுங்க' என்று பெற்றோரையே வசை பாடுகிறார் காவல் அதிகாரி. இந்த அவமானத்தை யெல்லாம் மீண்டும் அந்தப் பெண்ணின் மீது கொட்டுகின்றனர் பெற்றோர். கொடுமை தாள முடியாமல் அந்தப் பெண் தற்கொலை செய்து கொண்டாள். உடலை படம் பிடித்து மிரட்டியவனை கூடப் போராடி எதிர்கொண்ட அந்தப் பெண்ணால், தன் நிலையுணர்ந்து துணை நிற்க வேண்டிய குடும்பமும், சமூகமும் எதிராக திரும்பும்போது போராட முடியவில்லை; உயிரை மாய்த்துக் கொண்டாள்.

தன்னை காதலிக்கும் ஒருத்தனை நம்பாமல், ஒரு பெண் வேறு யாரை நம்புவாள்? பெண்களின் நம்பிக்கையை உடைக்கிற ஆண்கள் உயிரோடு வலம் வருகிறார்கள். ஆனால், 'மானம் காக்கும் வீரர்கள்' குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு முன்பு, பாதிக்க ப்பட்ட பெண்களையே தண்டிக்கிறார்கள். பாதிப்புக்கு ஆளான பெண்களுக்கு, இந்தச் சமூகத்தில் தொடர்ந்து வாழ்கிற தண்டனையைவிட, தற்கொலை என்கிற தவறான முடிவு எளிய தீர்வாக இருக்கிறது என்றால் அதற்காக நாம் வெட்கப்பட வேண்டாமா?

இதோ ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தையும் குற்றவாளிக்கூண்டில் நிறுத்துகிறது பொள்ளாச்சி சம்பவம். கொடூரமான பாலியல் கொடுமைக்கு ஆளான பெண் துணிந்து புகார் அளிக்கிறார். ஆனால், அந்தப் பெண்ணைப் பற்றிய எல்லா விவரங்களும் காவல் துறையின் மூலமாகவே வெளியானதும், அந்தக் குடும்பம் மிரட்டப்பட்டதும் நம்முடைய அலட்சியத்தையும் அமைப்புகளின் சரிவுகளையும் தோலுரிக்கிறது. இந்த நிகழ்வை ஒட்டி, பொதுவாக இரண்டுவிதமான எதிர்வினைகள் வருகின்றன. 'பெண்களே இதைப் பார்த்தாவது திருந்துங்கள். அறிமுகம் இல்லாத ஆண்களை நம்பாதீர்கள்' என்று அன்போடு அறிவுரை சொல்கிறது ஒரு கூட்டம். 'ஊசி இடம் கொடுக்காமல் நூல் நுழையுமா?' என்று இந்த நேரத்திலும் பெண் வெறுப்புப் பிரச்சாரம் செய்கிறது இன்னொரு கூட்டம். பெண்கள் மீதான இத்தகைய 'அன்பு', 'வெறுப்பு' இரண்டுக்கும் ஒரே அர்த்தம்தான். 'ஆண்கள் அப்படிதான் இருப் பார்கள். நீங்கள் அடங்கி ஒடுங்கி இருங்கள்' என்பதே அது.

**அறிமுகம் இல்லாத எந்த ஆணையும் நம்பாதே என்று பெண்களுக்கு சொல்கிற நாம், ஏன் 'பெண்களிடம் கண்ணியமாக நடந்து கொள்' என்று ஆண்களுக்குச் சொல்லத் தவறு கிறோம்? 'நாய்கள் ஜாக்கிரதை' என்று வீட்டின் முன்னே எச்சரிகை வாசகம் இருப்பதைப் போல, ஒவ்வொரு பெண்ணும், 'ஆண்கள் ஜாக்கிரதை' என்ற வாசகத்தை மனதில் ஒரு எச்சரிக்கைப் பலகையை மாட்டிக்கொண்டு அலைய வேண்டுமா?**

பொள்ளாச்சி பாலியல் வன்முறைக் காட்சிப் பதிவுகளில் உள்ள பெண்களின் கதறல் நம் ஈரக் குலையை அறுக்கிறது. தனிப்பட்ட இச்சைக்காக மட்டும் அந்தக் கயவர்கள் இதைச் செய்யவில்லை. பெண்களை ஆபாசமாகப் படம் பிடித்து, மிரட்டி காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள். மறுத்த பெண்களை அடித்து, துன்புறுத்தியிருக்கிறார்கள். வசதியானவர்களிடம் பணம் கேட்டு மிரட்டியிருக்கிறார்கள். பல ஆண்டுகளாக இதை ஒரு 'தொழில்' ஆகவே செய்துவரும் இவர்களைத் தொழில்முறைக் குற்றவாளிகளாகவே கருத வேண்டும்; கடுமையான தண்டனைக்குள்ளாக்க வேண்டும். அதேசமயம், இவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட்டதோடு பிரச்சினை முடிந்துவிடும் என்று நாம் நினைத்தால், அது அபத்தமானது.

பெண்ணின் உடலை வைத்து இந்தச் சமூகம் ஆடுகிற கேவலமான விளையாட்டின், சிறிய விளைவுதான் பொள்ளாச்சி சம்பவம். நூற்றுக் கணக்கான பெண்கள் பாதிக்கப்பட்டு இருந்தாலும், ஏன் எந்தப் பெண்ணும் முன்வந்து நம் சட்டத்திட மும், நீதியிடமும் பாதுகாப்பு கோரவில்லை? நம்பிக்கைக்குரிய 'ஆண்கள்' நிரம்பி இருக்கிற வீட்டிலும், தாங்கள் மிரட்டப்படுவதைச் சொல்ல விடாமல் அந்தப் பெண்களை எது தடுத்தது? அவர்களுக்கு நிகழ்ந்த அநீதியைவிட, அதை முறையிட்டு தீர்வு தேட முடியாத நம்முடைய கொடூரச் சூழல் மேலும் அபாயகரமானது இல்லையா? 'என்னை இப்படி தலைகுனிய வெச் சிட்டீயே' என்று ஓலமிடுகிற அன்பானவர்கள்தான், 'ஆபாசத்தை வெளியே பரவ விடுவேன்' என்ற குற்றவாளிகளின் மிரட்டலுக்கு பெண்கள் பலியாக முக்கியமான காரணமாகிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

ஒருவகையில் நிகழ்ந்திருக்கும் குற்றத்தில் நமக்கும் முக்கியமான பங்கிருக்கிறது. 'யார் உன்னை மிரட்டுகிறானோ, அவனைப் பொது வெளியில் நிறுத்தி அசிங்கப்படுத்து. சிறைக்கு அனுப்பு. நாங்கள் உன்னோடு இருக்கிறோம்' என்று குடும்பம் சொன்னால், இந்த மிரட்டல் ஒருபோதும் பலிக்காது. சட்டத்தைவிட, நம் பெண்களுக்கு இந்தப் பாது காப்புணர்வுதான் பலம் கொடுக்கும்.

குடும்பத்தாலும், சமூகத்தாலும் தன் உடலை வைத்தே பலவீனமாக வளர்க்கப்படுகிறாள் பெண். சமூக விரோதிகள் அதை பயன்படுத்திக் கொள்கிறார்கள். பிரச்சினையின் வேர் நம்மிடம்தான் இருக்கிறது. சிக்கிவிட்ட நான்கு குற்றவாளிகளின் மீது கல்லெறிந்துவிட்டு, பெண்களுக்கு எதிராக ஒட்டு மொத்த சமூகமாக நாம் நிகழ்த்துகிற குற்றங்களை மறைக்க முயற்சிக்கிறோம்.

கோவை மண்ணிலிருந்து படித்து முடித்து வெளியூரில் வேலை பார்க்கும் ஒரு பெண்ணின் முகநூல் பதிவு என்னை மிகவும் நெகிழச் செய்தது. "எவனாச்சும் உன் போட்டோ, வீடியோவ வெச்சி மிரட்டினா பயப்படாத. 'என்ன வேணா பண்ணிக் கோடா. உலகத்துல இருக்கிற எல்லா பொண்ணுக்கும் இருக்கிற உடம்புதான் எனக்கும் இருக்குனு சொல்லு' என்று தொலைபேசியில் கூறிய தன் அம்மாவை கட்டிப்பிடித்து அழ வேண்டுமென்று தோன்றியது" என்று அந்தப் பெண் எழுதியிருந்தார். ஒவ்வொரு பெண்ணுக்கும் இத்தகைய நம்பிக்கை நிறைந்த, பாதுகாப்பான இடமாக குடும்பங்கள் மாறாதவரை, இந்தக் குற்றங்கள் மீண்டும் மீண்டும் நடக்கும். இந்த மாற்றத்தின் முதல் முயற்சியாக, 'பெண்ணின் வெற்றுடல் ஆபாசமானதல்ல' என்ற முழக்கம் நம் குடும்பங்களில் இருந்து ஒலிக்கட்டும்.

பொள்ளாச்சியில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அவர்களின் குடும்பம் பாதுகாப்பாக இருக்க வேண்டும். யாருக்கும் அஞ்சாமல் அனைத்து உண்மைகளையும் வெளிப்படுத்த வேண்டும். அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை நீதிமன்றம் உறுதிசெய்து, இக்குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்களை விரைந்து தண்டிக்க வேண்டும். அதேசமயம், 'என் உடலை வைத்து நீ என்னை பணியச் செய்ய முடியாது. உன் வக்கிரத்தைவிட என் வெற்றுடல் ஆபாசமானது இல்லை' என்று பெண்கள் துணிந்து நிற்பதும், அதற்குத் துணையாக நாம் இருப்பதும் அனைவரின் கடமை. 'பாலியல் வன்முறையை'விட ஆபத்தானது, பெண்களுக்கு எதிராக நம் சமூகம் கட்டமைத்து வைத்திருக்கும் கருத்தியல் வன்முறை என்பதை உணருவோம்.

**நன்றி : 'தமிழ் இந்து'**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY   TAMIL WEEKLY  REG.NO.TN/CC(S)DN/459/19-21  LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM   REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# சென்னையில் இலங்கைத் தூதரகம் முற்றுகை: தோழர்கள் கைது

ஈழத் தமிழர்கள் மீது இலங்கை அரசு நடத்திய போர்க் குற்றங்கள் குறித்து பன்னாட்டு நீதிபதிகள் அடங்கிய கலப்பு நீதிமன்ற விசாரணையைத் தொடர்ந்து கிடப்பில் போடுவதைக் கண்டித்து மார்ச் 14, 2019 அன்று பகல் 11 மணியளவில் நுங்கம்பாக்கத்திலுள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டம் ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு சார்பில் நடத்தப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடந்தது. விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், த.தே.பேரியக்கத்தின் அருண பாரதி, த.தே.வி. இயக்கத்தின் தியாகு, த.தே.ம. முன்னணியின் மீ.த.பாண்டியன், த.வாழ்.கட்சி வேணுகோபால், பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் அன்சாரி, த.பெ.தி.க. குமரன், த.வி.க. சுந்தரமூர்த்தி, தொ. சீ.இயக்கத்தின் சேகர் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

நூற்றுக்கும் மேற்பட்டோர் இந்த முற்றுகைப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். இதை தொடர்ந்து போராட்டத்தில் பங்குபெற்ற சுமார் 50 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு மாலையில் விடுதலை செய்யப்பட்டனர். முற்றுகைப் போராட்டம் குறித்து கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கை:

இந்திய அரசே! இனக்கொலை இலங்கையைப் பாதுகாக்காதே! கால நீட்டிப்பைத் தடுத்து நிறுத்து! தற்சார்புள்ள பன்னாட்டுப் புலனாய்வுக்கு வழி செய்!

இந்திய வான்படை வீரர் அபி நந்தன் வர்த்தமான் பாகிஸ்தானிடம் மாட்டிக் கொண்ட போது அவரது புகைப்படமும் காணொளியும் வெளி வந்தபோது ஜெனீவா உடன்படிக்கை யின்படி போர் கைதிகளின் புகைப் படத்தை வெளியிடக் கூடாதென்று இந்தியா தெரிவித்ததோடு ஐ.நா. மனித உரிமை அமைப்பில் முறையிடப் போவதாகவும் சொன்னது. அதே சர்வதேச சட்ட விதிகள் மீறப்பட்டே ஈழத்து இசைப்பிரியாக்களும் பாலச் சந்திரன்களும் புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்தவர்களும் கொல்லப் பட்டனர். தன்னாட்டு வீரர்கள் பொருட்டு ஜெனீவா மன்றத்தில் முறையிடப் போவதாக சொல்லும் இந்திய அரசு, ஈழத் தமிழர்களின் பொருட்டோ குற்றமிழைத்த இலங்கையை ஆதரித்து நிற்கிறது. அபிநந்தன் வர்த்தமான்களுக்கு



ஒரு நீதி? பாலச்சந்திரன்களுக்கு ஒரு நீதியா?

ஐ.நா. மனித உரிமை அமைப்பின் கூட்டத் தொடர் பிப்ரவரியில் 25இல் தொடங்கியது, மார்ச் 25 வரை நடக்க-விருக்கிறது. மார்ச் 20 அன்று இலங்கை மீதான விவாதம் நடக்கவிருக்கின்றது. 2015 அக்டோபரில் அமெரிக்கா வுடனும் பிற நாடுகளுடனும் சேர்ந்து சிறிலங்கா கூட்டாக முன்மொழிந்த தீர்மானம் (30/1) மனித உரிமை அமைப் பில் ஒரு மனதாக நிறைவேறியது. அத்தீர்மானம் காமன் வெல்த் உள்ளிட்ட பன்னாட்டு நீதிபதிகள் பங்கேற்புடன் கூடிய சிறப்புத் தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என வலியுறுத்தியது. பின்னர், 2017 மார்ச் மாதம் 34/1 தீர்மானத்தில் சிறிலங்கா விற்கு இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் கொடுக்கப்பட்டு அதுவும் நிறைவடைந்து விட்டது.

இப்போது கனடா, ஜெர்மனி, மாசிடோனியா, மாண்டிநீக்ரோ, பிரித்தானியா ஆகிய நாடுகளடங்கிய சிறிலங்கா தொடர்பான முதன்மைக் குழு சிறிலங்காவுக்கு மீண்டுமொரு முறை காலநீட்டிப்பு வழங்க வேண்டும் என்று பிப்ரவரி 13ஆம் நாள் நிலையெடுத்து அறிவித்துள்ளது. மார்ச் 1 அன்று மேலும் ஈராண்டு காலம் நீட்டிப்புக் கொடுக்கும் பிரித்தானியாவின் தீர்மான வரைவு வெளி வந்துள்ளது. இத்தகைய கால நீட்டிப்பை ஏற்றுக் கொள்ளவே முடியாது.

பன்னாட்டு நீதிபதிகள் பங்கேற்புடனான கலப்பு நீதிமன்றத்தை அமைப்பதில் ஓரங்குலம்கூட முன்னேறாத நிலையில் மீண்டுமொரு ஈராண்டு கால அவகாசம் என்பது எவ்வித மாற்றத்தையும் கொண்டுவரப் போவதில்லை. இங்கு சிக்கல் காலம் போதவில்லை என்பதல்ல, நடை முறைப்படுத்துவதற்கு இலங்கை அரசிடம் அரசியல் மனத்திட்பம் இல்லை என்பதே. எனவே, இலங்கைக்கு கால நீட்டிப்பு தருவ தென்பது 2009க்குப் பின்பு இலங்கை செய்துவரும் கட்டமைப்பு ரீதியான தமிழின அழிப்புக்கு துணை செய்வதே!

பன்னாட்டுப் புலனாய்வுக் கோரியும் அரசியல் தீர்வுக்கு ஈழத் தமிழர் களிடையே பொது வாக்கெடுப்பு நடத்தக் கோரியும் தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இந்திய அரசு எள்முனையளவும் மதிக்க வில்லை. தமிழகத்தின் இறையாண்மையைக் காலில் போட்டு மிதித்து வருகிறது இந்திய அரசு.

சிறிலங்காவிற்கு காலநீட்டிப்பு வழங்கப்படக் கூடாது. சிறிலங்காவை அனைத்துலகக் குற்றவியல் நீதி மன்றத்தின் பார்வைக்கு அல்லது போர்க் குற்றப் புலன் விசாரணைக் கென்று சிறிலங்காவுக்காக அமைக்கப் படும் சிறப்புப் பன்னாட்டுக் குற்றத் தீர்ப்பாயத்தின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

போரினால் பாதிப்புற்றவர்களின் துயரம் குறித்தும், ஏனைய பன்னாட்டு மனிதவுரிமை, மனிதநேயச் சிக்கல்கள் குறித்தும் கண்காணித்து ஆறு மாதத்துக் கொரு முறை அறிக்கையளிக்கும் பொறுப்பில் சிறிலங்காவுக்கான ஐநா சிறப்பு அறிக்கையாளர் ஒருவர் அமர்த்தப்பட வேண்டும்.

இன அழிப்புச் சான்றுகளை அழிய விடாமல் காக்க ஒரு நடுநிலையான பன்னாட்டுப் பொறி முறை அமைக்கப் பட வேண்டும்.

மேற்படி கோரிக்கைகளை வலியுறுத்தக்கூடிய தீர்மானத்தை இந்திய அரசு ஐ.நா. மனித உரிமை அமைப்பில் முன்மொழிய வேண்டும். மேலும் அரசியல் தீர்வுகாண ஈழத் தமிழர் களிடையே பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதைப் பன்னாட்டு மன்றத்தில் வலியுறுத்த வேண்டும் - என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி முற்றுகைப் போராட்டம் நடை பெற்றது.

## நமது மருத்துவ-உயர்கல்வி மாணவர்கள் பிணமானார்களே-ஏன்?

பா.ஜ.க. ஆட்சியின் பார்ப்பன கல்விக் கொள்கைக்கு - எத்தனை உயிர்களைப் பலி கொடுத்தோம்? நினைவிருக்கிறதா?

அனிதா - 1200க்கு 1176 மதிப்பெண் பெற்றும் -ஏழைக் குடும்பத்தில் பிறந்த அந்த தலித் பெண்ணின் மருத்துவக் கனவை நீட் சிதைத்தது. மிக அதிக மதிப்பெண்களைப் பெற்ற அந்த மாணவி தன்னைத் தானே மாய்த்துக் கொண்டார். தமிழகமே கண்ணீர் கடலில் மூழ்கியது. பா.ஜ.க. பார்ப்பனர்கள் தொலைக்காட்சி விவாதங்களில் அதிகாரத் திமிருடன் ‘நீட்’டை நியாயப்படுத்திக் கொண்டிருந்ததையும் தமிழ்நாடு பார்த்தது. அந்தப் பார்ப்பனர்கள்தான் இப்போது மீண்டும் மோடியை ஆட்சியில் அமர்த்தக் கோரி நமது மக்களிடம் வாக்கு கேட்டு வருகிறார்கள் - மறந்து விடாதீர்!

• தமிழ்நாட்டிலிருந்து போட்டித் தேர்வுகளை எழுதி தேர்ச்சி பெற்று உயர் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்து படிக்கச் சென்ற மாணவர்கள் ஒருவர் பின் ஒருவராக மரணத்தைச் சந்தித்தார்களே நினைவிருக்கிறதா?

சண்டிகரில் உள்ள பி.ஜி.அய். எம்.இ.ஆர். மத்திய அரசு மருத்துவக் கல்லூரியில் மேல் பட்டப் படிப்பு படிக்கச் சென்ற முதலாம் ஆண்டு மாணவர் கிருஷ்ண பிரசாத் விடுதியில் இறந்து கிடந்தார்.

2016ஆம் ஆண்டு டெல்லி ‘எய்ம்ஸ்’ மருத்துவக் கல்லூரியில் படித்து வந்த தமிழக மாணவர் சரவணன், மர்மமான முறையில் மரணமடைந்தார்.

அவை தற்கொலைகள் என்று சாதித்தன பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரி நிர்வாகங்கள். **ஆனால் பிரேத பரிசாதனை முடிவுகள் தற்கொலை அல்ல; விஷ ஊசி செலுத்திக் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பதை உறுதி செய்தன.**

மருத்துவ முதுநிலைப் பட்டப் படிப்புகளில் சேரும் தமிழக மாணவர்களுக்கு தமிழகத்திலே வாய்ப்பு அளிக்காமல் அகில இந்திய சேர்க்கை முறையைப் பயன்படுத்தியதும், தமிழ்நாட்டைப்போல் அதிக மருத்துவ உயர்கல்வி அமைப்புகள் வடநாட்டில் இல்லாத நிலையில் தமிழக மாணவர்களை வடநாட்டாரோடு போட்டியிட வைத்து, தமிழக மாணவர்களை மனஉளைச்சலுக்கும் அவமானத்துக்கும் பாகுபாடுகளுக்கும் உள்ளாக்கிய பா.ஜ.க. அரசின் மோசமான கொள்கைகளும் தான் நமது தமிழகத்து இளம் அறிவுச் செல்வங்களைப் பறிகொடுத்து நிற்பதற்குக் காரணம்!

குஜராத் - அகமதாபாத்தில் பி.ஜே. மருத்துவக் கல்லூரியில் முதுநிலை மருத்துவம் பயின்ற தமிழ்நாடு மாணவர் 2018 மார்ச் மாதம் இதேபோல் தூக்க மாத்திரைகளை உட்கொண்டு தற்கொலைக்கு முயன்றார். ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த தன்னை சகமாணவர்கள், பேராசிரியர்கள், ஜாதிய ரீதியாக இழிவுபடுத்துவதே தனது தற்கொலைக்குக் காரணம் என்றார் அவர்.

அய்தராபாத் மத்திய பல்கலைக்கழகத்தில் படித்த தலித் மாணவர் ரோகித் வெமுலா, ‘இந்துத்துவா’ எதிர்ப்புக் கொள்கையுடையவராக இருந்த ஒரே காரணத்துக்காக நிர்வாகம் அவரை விடுதியிலிருந்தும் பல்கலையிலிருந்தும் வெளியேற்றியது. வீதிகளிலும் வளாகத்தின் வாயில்களிலும் உண்டு, உறங்கும் அவல வாழ்க்கைக்குத் தள்ளப்பட்ட அவர், மதவெறியர் - தனது உள்ளத்தின் வேதனைகளை இலக்கியத் தரம் வாய்ந்த கடிதமாக எழுதி வைத்து விட்டு தனது வாழ்க்கையை முடித்துக் கொண்டார். அவரது நண்பர் சேலம் முத்து கிருஷ்ணனும் அதே முடிவை சந்தித்தார். நாடே கண்ணீர் விட்டு அழுதது.

வளர்ந்து வரும் நமது இளந்தளிர்களின் வாழ்வை ‘வர்ணாஸ்ரம’ வெறிக்குப் பலியாக்கிய மதவாத சக்திகள்தான் இப்போது மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற வாக்குகளைக் கேட்டு வருகிறது!

## கழகத் தோழர் தாயார் மறைவு; உடல் மருத்துவமனைக்குக் கொடை



மயிலாடுதுறை திராவிடர் விடுதலைக் கழக நகர செயலாளர் நி.நடராஜன் தாயார்(81) சந்திரா 9.3.2019 இரவு இயற்கையெய்தினார். அம்மையாரது கண்கள் அரவிந்த் கண் மருத்துவமனைக்கும், உடல் புதுவை மகாத்மாகாந்தி மருத்துவமனைக்கும் கொடையாகக் கொடுக்கப்பட்டது. எந்த சடங்குகள் இன்றியும் இறுதி நிகழ்வு நடந்தது. அம்மையாரின் பிரிவால் வாடும் நடராஜன், நித்தியாநந்தம், ஓவியர் கிருபானந்தம் ஆகியோருக்கு ஆழ்ந்த இரங்கலைக் கழகம் தெரிவித்து கொள்கிறது. கழகத் தோழர்கள் கொடை வழங்கும் நிகழ்வில் பங்கேற்றனர்.

## கட்டமைப்புக்கு கண்ணாமூச்சி இராமு ரூ.10,000 நன்கொடை

திராவிடர் விடுதலைக் கழகம் கட்டமைப்பு நிதியாக கண்ணாமூச்சி பகுதியைச் சார்ந்த இராமு (ஆழ்துளை கிணறு உரிமையாளர்) நன்கொடையாக ரூ.10,000, இரத்தினசாமி (மாநில அமைப்புச் செயலாளர்), நாத்திக சோதி (ஈரோடு மேற்கு மாவட்ட தலைவர்), காவை ஈசுவரன் (தலைமை செயற்குழு உறுப்பினர்) ஆகியோரிடம் வழங்கினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP   Posted: 21st March 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN